பாலியர் நேசன்

BALIAR NESAN

தனிப்பிரதி ரூ.10/-ஆண்டுச் சந்தா ரூ.100/- மலர் 127 | பிப்ரவரி 2019 | இதழ் 02

பயணத்தில்
ஒத்தாசை
உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி,
உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.
சங்.91:11



பயணத்தில் நம்மோடு

அண்ணனின் கடிதம்-66

Hi Friends,

இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் எல்லாம் நலமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த மாதம் “பயணத்தில் ஒத்தாசை” என்ற தலைப்பில் நாம் சிந்திக்கப் போகிறோம். அதற்கு மையமாக கீழ்கண்ட வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறது,

“உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்” சங்.91:11

வாழ்க்கை முழுவதும் பயணங்கள் இருக்கிறது. வீட்டிலிருந்து பள்ளிக் கூடத்திற்கு செல்வதாக இருக்கலாம், உன் பெற்றோரோடு கூட உன் விருந்தினர்கள் விட்டிற்கு செல்வதாய் இருக்கலாம் அல்லது உன் நண்பர்களோடு கூட சென்ற கல்வி சுற்றுலாவாயிருக்கலாம், எது வானாலும் சரி நம் பயணங்கள் பாதுகாப்பாய், சிறப்பாய் அமைவது கடவுளின் கரத்திலிருக்கிறது. 91ம் சங்கீதத்தை எழுதிய ஆசிரியர் சொல்கிறார் நம் வழிகளிலெல்லாம் நம்மைக் காக்கும்படி கடவுள் தம் தூதர்களுக்கு கட்டளையிடுவார் என்று. பயணங்கள் எளிதானதல்ல. தெரியாத ஊர், புரியாத மக்கள், அறிமுகமில்லாத பாதை அதில் ஒளிந்திருக்கும் அபாயங்கள் பல அதனால் தான் வாழ்வில் மிகச் சிலரே துணிந்து பயணிக்கின்றனர். அதிலும் குறிப்பாய் தனியாய் பயணிப்பவர்கள் வெகு சிலரே. பரிசுத்த வேதாகமத்தில் கூட்டமாய் பயணித்த இஸ்ரவேல் மக்களின் வரலாறு மற்றும் இயேசு அவருடைய சீடர்களின் வரலாறு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தனியாய் பயணித்த ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, தாவீது, ஆகார், ரூத், பவுல் என்று பலரின் பயணம் அதில் அவர்கள் சந்தித்த சவால்கள் அவர்களை கடவுள் எப்படிக் காப்பாற்றி வழி நடத்தினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. எதிரிகளின் துரத்தல், பிழைப்பதற்கான முயற்சி, வாழ்வதற்கான தேடல், ஓடி ஓடி ஊழியம் செய்ய ஆசை போன்றவை இவர்களை பயணப்பட வைத்தது. வழிநடத்தும் கடவுள், காவல் காக்கும் தூதர்கள் வேறென்ன வேண்டும் நம் பயணங்கள் தொடர்வதற்கு!

நம் பயணங்கள் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படட்டும்

அன்பு அண்ணன்

(ஆ.பாக்யராஜ்)

Tirunelveli Diocesan Childern’s Mission,
16-B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627002,Tamilnadu.
baliarnesan@gmail.com
TDCM Helpline: 8489857572,www.baliarnesan.com

இஸ்ரவேலின் பயணம்

Rev.S.சௌந்திர பாண்டியன்

எல்லா சூழ்நிலையிலும் நாம் நம்புகிற ஆண்டவர் எப்படிப்பட்டவர் என்பதை 91ம் சங்கீதம் தெளிவாக கூறுகிறது.திகிலும் கவலையும் நம்மை ஆட்கொள்ளும்போது இந்த சங்கீதம் நமக்கு அதிக உற்சாகத்தையும் பெலனையும் அளிக்கிறது. ஆண்டவர் நமக்கு சொந்தமானவர்களை விடுவிப்பார்,பாதுகாப்பார்,அபாயங்களிலும், அழிவிலிருந்தும் காப்பார் என்று ஏராளமான வாக்குத்தத்தங்கள் இந்த சங்கீதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

1.இஸ்ரவேல் மக்களின் பயணங்கள்:—

வேதத்தில் அநேக பயணங்களை பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது.நாம் இப்போது இஸ்ரவேல் மக்களின் பயணத்தில் கடவுள் எவ்வாறு ஒத்தாசையாக இருந்தார் என்பதை தியானிப்போம்.மோசே இஸ்ரவேல் மக்களை கானானுக்கு வழிநடத்திச் செல்கிறார்.கானான் பயணம் மிகக் கடினமான பயணம்.அது பாலைவன பயணம்,உணவு பிரச்சனை.தண்ணீர் பற்றாக்குறை எனப் பல்வேறு பிரச்சனைகள் அனைத்திற்கும் ஆண்டவரே ஒத்தாசையாக இருக்கிறார்."என் சமுகம் உனக்கு முன்பாக செல்லும்." யாத்.33:14 "சமுகம்" என்ற வார்த்தை முகத்தைக் குறிக்கும். அது கடவுளையே குறிக்கும்."கடவுள் என்னுடன்"என்று பொருள்.இந்த பயணத்தில் கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு எவ்வாறு ஒத்தாசையாக இருந்து வழிநடத்துகிறார் என்பதை தியானிப்போம்.

1.எகிப்து நாட்டில் இஸ்ரவேலர் பயணம் சென்ற வழி:—

மோசேயை கடவுள் தெரிந்தெடுத்து தமது பணிக்கு அழைக்கிறார். கடவுளின் அழைப்புக்கு பணிந்து, மோசே எகிப்திற்கு திரும்பி, "தம் மக்களைப் போகவிடு" என்ற கடவுளின் கட்டளையோடு பார்வோனை சந்திக்கிறார்.பார்வோனின் பிடிவாதமும்,எகிப்தியர் பல வாதைகளால் துன்புறுத்தப்படுகிறார்கள்.எகிப்தியரின் தலைக்குழந்தைகள் இறந்துவிட இஸ்ரவேலருக்கு விடுதலை கிடைக்கிறது. அடிமை நாட்டில் இருந்து உறுதியளிக்கப்பட்ட நாடு நோக்கி இஸ்ரவேல் மக்கள் புறப்படுகின்றனர்.

எகிப்திலிருந்து கானானுக்கு செல்ல பல வழிகள் இருந்தன.அவற்றில் முதலாவது பெலிஸ்தியர் நாட்டின் வழியாக செல்லும் பாதையாகும்.இப்பாதை மற்றவற்றைவிட மிக எளிதானது.இரண்டாவது பாதை "சீன்" பாலைவனம் வழியாக செல்வது.மூன்றாவது சூரியஸ் வளைகுடா வடமுனையில் இருந்து எட்சியோன் கெபேருக்கு நேரே கிழக்கு நோக்கி செல்லும் எகிப்து அரேபியா வணிகப் பாதையாகும்.இவ்வழிகள் பயணத்துக்குப் பெரிதும் பயன்பட்டன.

2.இஸ்ரவேல் மக்களின் வெற்றிப்பயணம்:—

பெலிஸ்தியரின் நாட்டுக்குப்போகும் வழியை தவிர்த்துவிட்டு மோசே செங்கடல் என்று அழைக்கப்படும் நாணல் கடல் வழியாக கரடுமுரடான சீனாய் தீபகற்பத்திற்கு இஸ்ரவேலரை அழைத்துச் செல்கிறார்.

இப்பயணம் முழுவதும் கடவுள் இஸ்ரவேலருக்கு ஒத்தாசையாக இருந்து பல உதவிகளை செய்து இருக்கிறார்.யாத்திராகமம் 15ம் அதிகாரத்தில் வரும் வெற்றிப்பாடல் மேன்மையும்,மகிழ்ச்சியும் நன்றியும் மிக்க போற்றுதலுக்கு உரிய பாடல் ஆகும்.கடவுள் மக்களின் குறைகேட்டு மன்னாவையும்,காடைகளையும்,பாறையில் இருந்து தண்ணீரையும் அளிக்கிறார்.மோசேயின் வேண்டுதலால் அமலேக்கியரின் மேல் இஸ்ரவேலர் வெற்றி பெறுகின்றனர்.இஸ்ரவேல் மக்கள் செங்கடலை கடந்து,எகிப்தியர் துரத்தி வருவதில் இருந்து காப்பாற்றி,சீனாய் மலைநோக்கி பயணம் செய்து, 'சூர்' என்ற ஆள் நடமாட்டம் இல்லாத பாலைவன வழியாக மூன்று நாள் பயணம் செய்தபின் "மாரா" என்ற பெயருடைய நீரூற்றுக்கு வந்தடைந்தனர்."மாரா" என்பது எபிரேயத்தில் கசப்பு என்று பொருள்படும்.

மாரா என்ற இடத்தில் கடவுளின் கட்டளைப்படி ஒரு மரத்தை கிணற்றில்போட்டு கசப்பு நீரை குடிநீராக மாற்றி கொடுத்து மக்கள் உட்கொள்ள கொடுக்கிறார். எகிப்திலிருந்து புறப்பட்ட மூன்றாவது நாளில் இஸ்ரவேலர் சீனாய்மலையை அடைந்தனர். இஸ்ரவேல் சமய கருத்துப்படி கடவுளுக்குரிய புனிதமலை இரண்டு உண்டு.ஒன்று அவர் தம் பெயரை வெளிப்படுத்திய சீனாய்மலை.மற்றது அவர் குடிகொள்ளும் சீயோன்மலை. சீனாய் மலையில் தான் இஸ்ரவேலருடன் கடவுள் உடன்படிக்கை செய்துகொள்கிறார். அதன்படி அவர் அவர்களுடைய கடவுளாகவும். அவர்கள் அவருடைய மக்களாகவும் இருப்பர். இங்குதான் மோசேக்கு10 கற்பனைகள் வழங்கப்பட்டன. சீனாயில் தொடங்கிய இந்த ஒரே இறைவன் கோட்பாடு உலகமனைத்தையும் வெல்ல முன்னேறுகிறது. இஸ்ரவேலரின் பயணம் தேவஒத்தாசையோடு வெற்றியின் பயணமாக முடிவடைகிறது.

தெரிந்தெடுத்தல்,விடுதலை,உடன்படிக்கைகள் அடங்கிய ஒரு தொகுப்பாக இந்த இஸ்ரவேல் மக்களின் பயணம் அமைகிறது.இப்பயணத்தில் கடவுள் இஸ்ரவேலரை தேர்ந்தெடுத்தது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.உலகிலுள்ள எல்லா மக்களுக்குள்ளும் உங்களைத்தான் அறிந்து கொண்டோம் (ஆமோஸ்3:2). இதன் விளைவாக இஸ்ரவேலர் பல நன்மைகளை பெற்றனர்.முதலாவது எகிப்திலிருந்து விடுதலை பெற்றதாகும்.உடன்படிக்கை மற்ற நன்மைகளைவிட தனிச்சிறப்பு ஆகும்.இதன் விளைவாக கடவுளுக்கும்,இஸ்ரவேலருக்கும் நெருங்கிய உறவு ஏற்படுகிறது.(ஆமோஸ் 2:10,சங்கீதம் 8:10) இஸ்ரவேலர் சிறப்பு வாய்ந்த உரிமை பெற்றனர்.கடவுளின் தனி உடைமையாகின்றனர்.திருக்கூட்டமாகின்றனர். பரிசுத்த குலமாகின்றனர்.

நம்முடைய வாழ்க்கையின் பயணத்திலும் ஆண்டவர் ஒத்தாசையாக இருப்பார். எனக்கு ஏன் இந்த கஷ்டங்கள்,வியாதிகள்,வறுமைகள், சோதனைகள்,அவப்பேருகள் என்று பல்வேறு இக்கட்டுகளினால் நம் வாழ்வு கசப்பு நிறைந்த வாழ்வாக இருக்கலாம்.மாராவின் நீர் கசப்பாக இருந்தது.ஆனால் ஆண்டவர் மதுரமாக மாற்றி ஆசீர்வதித்தது போல நம் வாழ்வையும் மாற்ற வல்லவராய் இருக்கிறார்.

நாம் செய்யவேண்டிய காரியம் ஒத்தாசை வரும் பர்வதத்திற்கு நேராய் நம் கண்களை ஏறெடுத்து பார்த்து,நம் வாழ்க்கை பயணம் வெற்றியுள்ள பயணமாக அமைய ஆண்டவரிடம் அர்ப்பணிப்போம். ஆமென்.

எங்கள் தேவனுடைய கரம் எங்கள்மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களைத் தப்புவித்தது. எஸ்றா 8:31 (பி)

தியானம்

Mrs.Helen Rachel Dhanasingh

1.வெள்ளி வாய்க்கச் செய்கிறவர் சங்.1:1-6

"தொட்டதெல்லாம் பொன்னாகும்" என்ற தமிழ் பழமொழி கர்த்தருடைய வேதவசனங்களை அனுதினமும் வாசித்து தியானிக்கும் போதும், அதின்படி நடக்கும்போது கர்த்தர் நம்முடைய காரியங்களை வாய்க்கச்செய்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் படி நடந்தால் அது நம்மை நல்வழிப்படுத்தும். புத்திமானாய் நடந்துகொள்ள உதவும். ஆகவே நீ வேதத்தை தியானம்பண்ணு.

2.சனி தரிசிக்கும் பாக்கியம் லூக்.2:22-40

சிமியோன் ஆண்டவரின் பாதத்தில் காத்திருந்ததின் நிமித்தமாக இவ்வுலகத்தை பாவத்திலும் சாபத்திலுமிருந்து மீட்கப்போகிற இரட்சகரை தரிசிக்கும் பாக்கியத்தை பெற்றுக்கொண்டான். நீயும் காத்திரு தேவனை தரிசிக்கும் பாக்கியத்தை பெறுவாய்.

3.ஞாயிறு கர்த்தரை சேவித்தல் சங்.2:1-12

கர்த்தரை பயத்துடனே சேவிக்க வேண்டும். கடவுள் பயம் இல்லாத மக்களாக அநேகர் இன்று கடமைக்கென்று கடவுளை சேவித்து வருகிறார்கள். அவ்வாறு சேவிப்பது நம் வாழ்க்கையில் நன்மை கிடைப்பது இல்லை. ஆகையால் கடவுள் பயத்துடனே அவரை சேவிக்கும்போது கடவுளின் கிருபையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

4.திங்கள் தாங்குகிறவர் சங்.3:1-8

தாவீது வாழ்க்கையில் சத்துருக்கள் பெருகியிருந்தார்கள். தேவனிடத்தில் விடுதலை கிடையாது என்று மற்றவர்கள் சொன்னாலும் தாவீது தேவனை நோக்கி கூப்பிட்டான். கர்த்தர் அவன் கேடகமாயிருந்து தலைநிமிர்ந்து நிற்கச்செய்தார். நீயும் அவரை நோக்கிக் கூப்பிடு. உனக்கு கர்த்தர் ஆதரவாயிருந்து சத்துருக்களுக்கு முன்பாக நம்மை உயர்த்தி ஆதரிப்பார்.

5.செவ்வாய் கர்த்தரால் நம்பிக்கை சங்.4:1-8

நெருக்கத்தின் மத்தியில் இருந்த தாவீது கர்த்தர் மீது நம்பிக்கை வைத்ததின் நிமித்தமாக கர்த்தர் உதவிசெய்தார். நீயும் கர்த்தரின் மீது நம்பிக்கை கொண்டு ஸ்தோத்திர பலிகளை செலுத்தும்போது தேவன் நமக்கும் உதவிசெய்வார்.

6.புதன் அதிகாலையில் தேடு சங்.5:1-12

அதிகாலை நேரம் ஆண்டவர் பாதம் தேடினால் அவர் சத்தம் கேட்போம், மற்றவர்களிடம் பேசுவதற்கு முன்னதாக கடவுளிடம் பேசிப்பார். அந்தநாள் ஆசீர்வாதமாக இருக்கும். ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் முதலாவது கர்த்தரிடம் பேசிவிட்டு தான் மற்றவரிடம் பேசுவார். இதனால் அவருடைய நாட்களில் நாடு ஆசீர்வாதமாக இருந்தது.

7.வியாழன் இரக்கமுள்ள கர்த்தர் சங்.6:1-10

தாவீது இக்கட்டு காலத்தில் உதவி செய்யுமாறு பணிவுடன் வேண்டி நிற்கிறார்.கர்த்தர் அவர் அழுகையின் சத்தத்தைக் கேட்டு பதில் கொடுத்தார். உமது கிருபையினிமித்தம் என்னை காத்தருளும் என்று கூறுகிறார். தேவன் இரக்கம் பாராட்டினார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் வரக்கூடிய வேதனை மத்தியில் கர்த்தரை நோக்கி கூப்பிடும்போது நம்மேல் இரக்கம் வைப்பார்.

8.வெள்ளி நியாயம் செய்கிறவர் சங்.7:1-17

அநீதி நிறைந்த உலகத்தில் நாம் நியாயத்தை எதிர்பார்க்க முடியவில்லை. பணம் ஒருவரின் நியாயத்தை மூடிப்போடுகிறது. ஆனால் நம் தேவன் நீதியரசராக விற்றிருக்கிறார். அவர் நியாயம் செய்வார். கர்த்தர் சமூகத்தில் காத்திருப்போம் நியாயத்தை வெளிக்கொண்டு வருவார்.

9.சனி பாலகர் சங்.8:1-9

கர்த்தர் நாமம் பூமியெங்கும் மேன்மையுள்ளதாயிருக்கிறது. பகைஞன், பழிகாரன் இவர்களை அடக்குவதற்காக சிறுபிள்ளைகள் வாயில் தம்முடைய வார்த்தைகளை போடுகிறார்.இதனால் சத்துருக்கள் வெட்கப்பட்டுப்போகிறார்கள். நம்மை தேவன் பெலப்படுத்தி உயர்த்துவாராக.

10.ஞாயிறு நற்செய்தி அறிவித்தல் சங்.9:1-20

நாம் கர்த்தரை சேவித்து அவர் நம்முடைய வாழ்க்கையில் செய்த அதிசயங்களை நன்மைகளை ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும்.அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. நற்செய்தி அறிவிக்கும் நாளில் அமைதியாயிருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். கிடைக்கும் நேரத்தில் நற்செய்தி அறிவித்தல் நமக்கு ஆசீர்வாதத்தை தரும்.

11.திங்கள் சகாயர் சங்.10:1-18

பலவிதமான போராட்டங்கள் மத்தியில் கலங்கி நின்றுகொண்டு, தனக்கு உதவி செய்ய யாருமில்லையே என்று திக்கற்று நிற்கிற மக்களுக்கு கர்த்தர் சகாயராயிருக்கிறார். அவரே அவர்களுடைய எல்லா உபத்திரவங்களிலிருந்து விடுதலையாக்கி காக்கிறார். கர்த்தரைப் பற்றிக்கொள்வோம்.

12.செவ்வாய் நீதியுள்ள ஆண்டவர் சங்.11:1-7

மனுஷனுடைய நீதி அழுக்கான கந்தையாயிருக்கிறது. கர்த்தரோ நீதி செய்கிறவராயிருக்கிறார். நீதியின் மேல் பிரியப்படுகிறவர் அவருடைய முகம் செம்மையானவனை பார்த்திருக்கிறது. நீதி கிடைக்காத இந்த உலகத்தில் தேவனே நமக்கு நியாயம் செய்கிறவராயிருக்கிறார். அவரையே நோக்கிப் பார்ப்போம். அவர் நம்மை வழிநடத்துவார்.

13.புதன் சுகம் தருகிறவர் சங்.12:1-8

ஏழை, எளியவர்களின் பெருமூச்சை கேட்டு அவர்கள் மேல் சீறுகிறவர்களுக்கு விலக்கி காத்து சுகமாய் தங்கப்பண்ணுகிறவர் கர்த்தரே. கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி குணமாக்குகிறார். அவர் வார்த்தை வல்லமை மிக்கது.வியாதியை எல்லைகளை விட்டு விலக்கி ஆண்டவர் நமக்கு சுகம் தருகிறார். இயேசுவின் காயப்பட்ட தழும்பை நோக்கிப்பார் சுகம் உண்டு.

14.வியாழன் களிகூறப்பண்ணுகிறவர் சங்.13,14

தாவீது பல நெருக்கத்தின் மத்தியில் வாழ்ந்திருக்கும்போது கர்த்தரை நோக்கி விண்ணப்பிக்கிறான்.அவனை மேற்கொண்டேன் என்று என் சத்துரு சொல்லாதபடி காத்தருளும் என்று விண்ணப்பிக்கிறான். கர்த்தர் அவன் இருதயத்தை களிகூறப்பண்ணுகிறார். நீயும் கர்த்தரின் கிருபையின்மேல் நம்பிக்கையாய் இருந்தால் உன் இருதயமும் களிகூரும்.எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்கும்.

15.வெள்ளி **உறுதியான நம்பிக்கை** **சங்.15,16**

தாவீதின் நம்பிக்கை கர்த்தரிடத்தில் இருந்தது.எப்பொழுதும் கர்த்தரை தனக்கு முன்பாக வைத்திருந்தான். ஆகவே கர்த்தர் என்னோடு இருக்கிறார். நான் அசைக்கப்படுவதில்லை என்று கூறுகிறார். நாமும் கர்த்தரிடத்தில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தால் எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை விட்டு பின்வாங்க மாட்டோம்.

16.சனி **காப்பவர்** **சங்.17:1-15**

நம் கண்மணியை நம் விரலால் தொடமுடியாது உடனே கண்மூடிவிடும். உன்னை தொடுபவன் என் கண்மணியை தொடுகிறவன் என்று வாக்குறுதி ஆண்டவர் தந்துள்ளார். கண்ணை இமை காப்பதுபோல தான் நான் உன்னை காப்பேன். நம்மை காக்கும் ஆண்டவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை. விழித்திருந்து பாதுகாக்கும் ஆண்டவரை பிடித்துக்கொள்வோம். பாதுகாப்போடு வாழ்வோம்.

17.ஞாயிறு **ஆதரவு** **சங்.18:1-20**

தாவீது வாழ்க்கையில் சத்துருக்களினாலும் சவுலினாலும் நெருக்கங்கள் ஏற்ப்பட்டது. அந்த நேரத்தில் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார். கர்த்தர் அவனுக்கு ஆதரவாயிருந்து மீட்டுக்கொண்டார். நாமும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவோம். கர்த்தர் நமக்கு ஆதரவாயிருந்து விடுதலை தருவார்.

18.திங்கள் **இருளை வெளிச்சமாக்குகிறவர்** **சங்.18:21-50**

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அவர் நமக்குள் வரும்போது நம்முடைய பாவ இருள் நீங்கி வெளிச்சத்தின் பிள்ளைகளாய் காணப்படுவோம். இயேசுகிறிஸ்து உன் வாழ்க்கையில் விளக்காய் தோன்ற வேண்டுமானால் நீ அவரை ஏற்றுக்கொள். எழும்பி பிரகாசி. உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.

19.செவ்வாய் **பாவத்திலிருந்து விடுவிப்பவர்** **சங்.19:1-14**

கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கும்போது அது என்னை பாவம் செய்யாதபடிக்கு காத்துக்கொள்கிறது. பாவத்திலிருந்து விடுதலை கொடுப்பவர் தேவன் மட்டுமே என்று உணர்ந்து துணிகரமான பாவம் என்னை மேற்கொள்ளாதவாறு காத்துக்கொள்ளும் என்று வேண்டி நிற்கிறான். நாமும் வேண்டும்போது பாவத்திலிருந்து நம்மை காத்துக்கொள்வார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

20.புதன் எழுந்திருக்கப்பண்ணுகிறவர் சங்.20:1-9

மனிதர்கள் அவர்கள் திறமைகளை உயர்த்திக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில் தாவீது தேவனுடைய நாமத்தை உயர்த்தி மேன்மை பாராட்டுகிறார். ஏனென்றால் திறமையை நம்பியிருந்தவன் முறிந்து விழுந்தான்.தாவீது கர்த்தரை நம்பி வெற்றிபெற்றான். நாமும் கர்த்தரையே குறித்து மேன்மைப்பாராட்டும்போது ஒருநாளும் முறிந்துபோவதில்லை நிமிர்ந்து நிற்போம்.

21.வியாழன் பொற்கிரீடம் சங்.21:1-13

கிரீடம் மகிமை,ஆளுகை தன்மையை வெளிப்படுத்துவதாகும். ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் நமக்கு ஆண்டவர் தங்ககிரீடம் தலையில் சூட்டுகிறார். பவுலும் நல்ல போராட்டத்தை போராடினேன் விசுவாசத்தை காத்தக்கொண்டேன் எனக்கு ஆண்டவர் நீதியின் கிரீடம் தருவார் என்று சொல்கிறார். நம் வாழ்க்கை போராட்டத்திலும் ஆண்டவர் மீது வைக்கும் விசுவாசத்தை காத்துக்கொள்வோம் நமக்கும் தங்கக்கிரீடம் கிடைக்கும்.

22.வெள்ளி சாந்தம் சங்.22:1-31

"பொறுத்தார் பூமி ஆழ்வார்" என்ற பழமொழி தமிழில் உண்டு. மோசே சகல மனிதரிலும் சாந்தகுணமுள்ளவன் என ஆண்டவர் சாட்சி கொடுத்தார். செங்கடல் அருகே முன்னே கடல் பின்னே பார்வோன் படை நடுவில் இஸ்ரவேல் மக்களின் போராட்டம் இவற்றின் மத்தியில் மோசே அமைதியாக ஆண்டவரிடம் மன்றாடினான். மக்களிடம் இன்று கண்ட எகிப்தியரை இனி பார்ப்பதில்லை. நீங்கள் சும்மா இருங்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார் என சாந்தமாய் பதிலளித்தார். சாந்தம் மன அமைதி,தெளிவு நம் வாழ்க்கையில் தரும். அதுவே நம் வாழ்வில் வெற்றி.

23.சனி என்னை தொடரும் சங்.23:1-6

தாவீது சிறுவனாக இருந்தபோது ஆடு மேய்த்துக்கொண்டிருந்தான். ஆனால் அவனை ஆண்டவர் அரசனாக உயர்த்தினார். அவன் தன் வாழ்வின் மேன்மையை உணர்ந்து அண்டவர் எனக்கு மேய்ப்பனாக இருப்பதால் இந்த உயர்வு பெற்றேன். அவரே என் வாழ்க்கையில் நன்மையையும் கிருபையையும் தருகிறவர் என உணர்ந்து பாடுகிறார். நாமும் இயேசப்பாவை நம் தலைவராக ஏற்றுக்கொண்டால் நமக்கும் நன்மையும், கிருபையும் கிடைக்கும்.

24.ஞாயிறு **சீட்டு** **அப்.1:15-26**

யூதாஸ் இறந்துபோனதால் 12 சீஷர்கள் எண்ணிக்கை 11 ஆக குறைந்தது. அதை சரிசெய்ய சீஷர்கள் ஜெபித்து சீட்டுபோட்டு எடுத்தார்கள். அதில் மத்தியா பெயருக்கு விழுந்தது. மற்ற சீஷர்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுகொண்டனர். வேதத்தில் பலர் தங்கள் குழப்பத்திற்கு சீட்டுபோட்டு காரியத்தை நடப்பித்தனர். நாமும் நமது குழப்பத்திற்கு ஆண்டவர் உதவியை நாடுவோம்.நம்முடைய காரியம் சித்திபெறும் அல்லது வெற்றிபெறும்.

25.திங்கள் **நேர்மை** **சங்.25:1-22**

கர்த்தர் நம்மிடம் நேர்மையை எதிர்பார்க்கிறார். ஆனால் தவறு செய்யும் மனிதர்கள் குறுக்கு வழியில் சம்பாதிக்க நேர்மை தவறுகிறார்கள். அதை பொத்தலான பைக்கும், முட்டையிட்டு அடைகாத்து குஞ்சுபொரிக்காதிருக்கும் கௌதாரிக்கு சமம் என வேதம் சொல்கிறது. நேர்மை என்றும் மகிழ்ச்சியையும், மேன்மையையும், ஆசீர்வாதத்தையும் தருகிறது. நேர்மையில் நடப்போம் கடவுளின் ஆசீர்வாதம் பெறுவோம்.

26.செவ்வாய் **துதி** **சங்.26:1-12**

கர்த்தர் தாவீது வாழ்க்கையில் அநேக நன்மைகளை செய்ததால் அவைகளை சபை எல்லாருக்கும் முன்பாக சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்துவேன் என்கிறார். ஸ்தோத்திரம் செய்தலே தகுதியானது. அவரே துதிக்கு பாத்திரர்.கர்த்தரை நாம் எக்காலத்திலும் அவர் செய்த அதிசயங்களை சொல்லி ஆண்டவரை புகழுவோம். அவர் நம்மை மென்மேலும் உயர்த்துவார்.

27.புதன் **காத்திரு** **சங்.27:1-14**

வெளியூர் பயணம் செய்ய வேண்டுமென்றால் இரயில் நிலையத்தில் இரயில் வரும் முன்னரே சென்று விடுகிறோம். ஆகாயத்தில் பயணம் செய்ய 2 மணிநேரம் முன்னரே சென்றுவிடுகிறோம். நெடுநாள் காத்திருப்பது இதயத்தை இளைக்கப்பண்ணும். விரும்பினது கிடைக்கும்போது ஜீவவிருட்சம் போலிருக்கும். நாம் கர்த்தருக்கு காத்திருந்து புதுபெலன் பெற்று சோர்ந்துபோகாமல் நமக்கு ஆண்டவர் ஆயத்தம்பண்ணியிருக்கும் இறைஅரசை சுதந்தரிப்போம்.

28.வியாழன் **சகாயம்** **சங்.28:1-9**

"மனிதன் எட்டமட்டும் தான் தாங்குவான்" என்ற பழமொழி மனிதனுடைய இயலாமையை வெளிப்படுத்துகிறது. மனிதனால் கூடாததுதான் ஆனால் தேவனால் எல்லாம் கூடும். ஆகவே மனிதனை நம்புவதை காட்டிலும் கர்த்தர் பேரில் நம்பிக்கையாயிருப்போம். அவர் நமக்கு சகாயம் செய்து நம்முடைய காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

வித்தியாசங்களை கண்டுபிடி

தேடு கண்டுபிடி

-A.Esther , TDCM

1.மதியீனத்தைப் பார்க்கிலும் எது உத்தமம்?
2.எது சீக்கிரமாய் அறாது?
3.எதினால் இருதயம் சீர்ப்படும்?
4.இருதயத்தை கெடுப்பது எது?
5.ஞானம் __________, திரவியமும் ________ .
6.யாருடைய நெஞ்சில் கோபம் குடி கொள்ளும்?
7.நன்மையை கெடுப்பது யார்?
8.எது பெரிய குற்றங்களை அமர்த்திப் போடும்?
9.யாரை மனதில் நிந்திக்கக் கூடாது?
10.எது உடலுக்கு இளைப்பு?

விடைகளை பிரசங்கி புத்தகத்திலிருந்து தேடி கண்டுபிடித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 2019 மார்ச் முதல் தேதிக்குள் அனுப்புங்கள்:

TDCM,16-B,North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002

பாடல்

பயப்படமாட்டேன் நான் பயப்படமாட்டேன்–2
இயேசுஎன்னோடு இருப்பதனால்–2
ஏலேலோஐலேசா ஏலேலோ–2

1.உதவிசெய்கிறார்,பெலன் தருகிறார்
ஒவ்வொருநாளும் கூட வருகிறார்–2

2.காற்று வீசட்டும் கடல் பொங்கட்டும்
எனதுநங்கூரம் இயேசு இருக்கிறார்.–2

காலை மாலை வாசிக்கவேண்டிய வேதாகம பகுதிகள் - பிப்ரவரி

கர்த்தாவே உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படிக்கு
என் கண்களைத் திறந்தருளும்.ஆமென்.

நாள்	காலை பாகம்	மனப்பாட தங்கவசனங்கள்	ஒத்துவாக்கியம்	மாலை பாகம்
1வெள்ளி	சங்.1:1—6	...அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.(3)	யோசு.1:8	யோசு.19:24—51
2சனி	லூக்.2:22—40	உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது...(32)	சங்.17:15	யோசு.20:1—9
3ஞாயிறு	சங்.2:1—12	பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள்...(11)	யோசு.24:15	யோசு.21:1—26
4திங்கள்	சங்.3:1—8	...கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.(5)	ஏசா.46:4	யோசு.21:27—45
5செவ்வா	சங்.4:1—8	...கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருங்கள்.(5)	ஏரே.17:7	யோசு.22:1—18
6புதன்	சங்.5:1—12	...காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்...(3)	நீதி.8:17	யோசு.22:19—34
7வியாழன்	சங்.6:1—10	என்மேல் இரக்கமாயிரும்...(2)	சங்.103:13	யோசு.23:1—16
8வெள்ளி	சங்.7:1—17	கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ்செய்வார்;...(8)	சங்.58:11	யோசு.24:1-11
9சனி	சங்.8:1—9	...பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.(2)	லூக்.10:21	யோசு.24:12—22
10ஞாயிறு	சங்.9:1—20	...அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.(11)	2இரா.7:9	யோசு.24:23—33
11திங்கள்	சங்.10:1—18	...திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே.(14)	உபா.33:29	நெகே.1:1—11
12செவ்வா	சங்.11:1—7	கர்த்தர் நீதியுள்ளவர்,.(7)	சங்.19:9	நெகே.2:1—10
13புதன்	சங்.12:1—8	...காத்துச் சுகமாயிருக்கப்பண்ணுவேன்...(5)	லேவி.25:19	நெகே.2:11—20
14வியாழன்	சங்.13:1—6	...இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்.(5)	சங்.65:8	நெகே.3:1—14

15வெள்ளி	சங்.16:1—11	...நான் அசைக்கப்படுவதில்லை.(8)	சங்.62:2	நெகே.3:15—32
16சனி	சங்.17:1—15	கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்.(8)	சங்.121:4	நெகே.4:1—10
17ஞாயிறு	சங்.18:1—20	...கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்.(18)	2சாமு.22:19	நெகே.4:11—10
18திங்கள்	சங்.18:21—50	...கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். (28)	ஏசா.58:8	நெகே.5:1—10
19செவ்வா	சங்.19:1—14	...பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.(13)	1சாமு.25:28	நெகே.5:11—19
20புதன்	சங்.20:1—9	...எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.(8)	ஏசா.52:1	நெகே.6:1—10
21வியாழன்	சங்.21:1—13	...சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்.(3)	2தீமோ.4:8	நெகே.6:11—19
22வெள்ளி	சங்.22:1—31	சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்;...(26)	மத்.5:5	நெகே.7:1—73
23சனி	சங்.23:1—6	...நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்...(6)	1பேதுரு.3:11	சங்.24
24ஞாயிறு	அப்.1:15—26	...சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது...(26)	நீதி.16:33	நெகே.8:1—18
25திங்கள்	சங்.25:1—22	உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது;...(21)	ஏசா.57:2	நெகே.9:1—10
26செவ்வா	சங்.26:1—12	...சபைகளிலே நான் கர்த்தரைத் துதிப்பேன்.(12)	சங்.9:1	நெகே.9:11—20
27புதன்	சங்.27:1—14	கர்த்தருக்குக் காத்திரு;...(14)	ஏசா.40:31	நெகே.9:21—38
28வியாழன்	சங்.28:1—9	...நான் சகாயம் பெற்றேன்..(7)	ஏசா.41:10	நெகே.10:1—39

2. கிறிஸ்து திருமுன்னிலைப்படுத்தப்பட்ட திருநாள்,

24. புனிதர் மத்தியாவின் திருநாள்

திருவசன ஊழியம்

03.02.2019 **பெண்களின் திருப்பணியை நினைவுகூர்ந்து கொண்டாடுதல்** நியாயா.4:4

அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்.

10.02.2019 **கர்த்தருக்கே ஆராதனை** சங்.95:6

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

17.02.2019 **சார்ந்திருக்கும் இயற்கை** சங்.104:24

கர்த்தாவே,உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.

24.02.2019 **சீர்குலைக்கப்பட்ட படைப்பு** ரோமர்.11:18

நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால்,நீ வேரைச் சுமக்காமல்,வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.

03.02.2019 REMEMBERING AND CELEBRATING WOMEN'S MINISTRY JUDGES.4:4

At that time Debora, a prophetess,wife of Lappidoth,was judging Israel.

10.02.2019 PRAISE THE LORD (WORSHIP) SALMS.95:6

O come,let us worship and bow down let us kneel before the Lord,our Maker!.

17.02.2019 THE INTER-DEPENDENCE IN CREATION PSALM.104:24

O Lord,how manifold are your works! In wisdom you have made them all: the earth is full of your creatures.

24.02.2019 THE CORRUPTION OF CREATION ROMANS.11:18

Do not vaunt yourselves over the branches.If you do vaunt yourselves,remember that it is not you that support the root,but the root that supports you.

கங்காரு - வண்ணம் தீட்டு

கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கை செய்து,
வரும் எண்ணிற்கு ஏற்ற நிறத்தை தீட்டு

0 orange 1 yellow
2 green 3 blue



✻எபிரேய மாதங்கள்✻

A.Esther TDCM

1.முதல் மாதம் எது? (எஸ்)
2.இரண்டாம் மாதம் எது? (1ராஜா)
3.மூன்றாம் மாதம் எது? (எஸ்)
4.ஏழாம் மாதம் எது? (1ராஜா)
5.எட்டாம் மாதம் எது? (1ராஜா)
6.ஒன்பதாம் மாதம் எது? (சகரியா)
7.பத்தாம் மாதம் எது? (எஸ்)
8.பதினொறாம் மாதம் எது? (சக)
9.பன்னிரண்டாம் மாதம் எது? (எஸ்)

விடைகளை கண்டுபிடி!



பவுல் அண்ணனை இயேசுவண்டை கொண்டு செல்ல வழி காட்டுங்க





வில்லியம் வில்பர்போர்ஸ்

திருமதி. ஜீனிதா டேவிட்சன்

இயேசு கிறிஸ்துவின் அன்பு ஒருவரை ஆட்கொண்டால், அவர் எவ்வளவு பெரிய பணக்காரராக,திறமைசாலியாக இருந்தாலும்,கிறிஸ்துவின் அன்புக்கு கட்டுப்பட்டு நடக்கும்போது எவ்வளவு பெரிய காரியங்கள் நடக்கும் தெரியுமா?

ஒரு மிகப்பெரிய செல்வந்த வியாபாரியின் மகனாக 24 ஆகஸ்ட் 1759ஆம் ஆண்டு வில்லியம் வில்பர்போர்ஸ் பிறந்தார். தன் தந்தையை ஒன்பது வயதிலேயே இழக்க லண்டன் அருகில் சுவிசேஷகர்களாக இருந்த அத்தை, மாமா வீட்டிற்கு அனுப்பப்பட்டார். தனது 12வது வயதிலேயே கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்தார். ஆனால் அது குறுகிய காலமே அவர் வாழ்வில் காணப்பட்டது.

1776இல், கேம்பிரிட்ஜ், செயிண்ட் ஜான் கல்லூரியில் இளங்கலை பயின்றார். அங்கு வில்பர்போர்ஸ். ஒரு அழகான, ஆழ்ந்து படித்த, அறிவாற்றல் மிக்க, சொல்திறன் மிக்க, விருந்தோம்பல் நிரம்பிய, தன் நண்பர்களையும் தன்னை பின்பற்றுகிறவர்களையும் ஈர்த்து இழுக்கக்கூடிய கவர்ச்சி மிக்க இயற்கையான தலைவராக வலம் வந்தார்.

1779இல், லண்டனுக்கு இடம் பெயர்ந்த வில்பர்போர்ஸ்க்கு, வில்லியம் பிட்(முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர்)உடன் இணைபிரியாத நட்பு ஏற்பட்டது. இருவரும் இணைந்து அரசியலில் நுழைந்தனர். 1780இல் வில்பர்போர்ஸ், தனது 21வது வயதிலேயே பாராளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டார். 1784ஆம் ஆண்டு, எல்லோரும் மதிக்கத்தக்க, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முன்னணி வாதக்காரராக திகழ்ந்தார். அந்நாட்களில் அடிமைகளின் வியாபாரம் பிரபலமான தொழிலாக விளங்கியது.

எதைக்குறித்தும் வில்பர்போர்ஸ் கவலைப்பட அவசியம் இல்லாதிருந்தது. அவர் வாழ்வில் தேவை என்று எதுவுமே அப்பொழுது இல்லை.ஆகவே ஐசக் மில்னரோடு ஐரோப்பாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.ஐசக் மில்னர், கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தின் புத்திசாலியான,சிறந்த ஆராய்ச்சியாளர் மற்றும் ஆங்கிலிகன் சபையின் ஆயராகவும் இருந்தார். வில்பர்போர்சுக்கு,வில்னரைக் கண்டு ஒரே வியப்பு! என்ன அது? ஒரு சிறந்த அறிவாளி,எப்படி கிறிஸ்தவ உலகப்பார்வையும் உடையவராக இருக்க முடியும்? என்பதுதான்.இருவரும் இணைந்து, புதிய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் வாசித்து,ஆய்வு செய்தனர்.

தனது இரண்டு ஐரோப்பிய பயணங்களின் முடிவில், அந்த அரசியல்வாதி தன் பாவங்களைக்குறித்து உணர்த்தப்பட்டார்.

‘‘என் நேசரின் சொல்லிமுடியாத இரக்கங்களை இத்தனை நாட்களும் நான் புறக்கணித்து விட்டேனே’’ என்று மனம் வருந்தினார். உடனே அரசியல் வாழ்வை விட்டு வெளியேற முடிவெடுத்தார்.

ஆனால் அரசியலைக் கொண்டே கர்த்தர் அவரை பயன்படுத்த திட்டம் கொண்டிருந்தார். 1785இல்,ஜான் நியூட்டன்(பெரிய சுவிசேஷகர்) மற்றும் வில்லியம் பிட் (நண்பர்) ஆகியோரின் ஆலோசனைக்கேற்ப அரசியலில் இருந்து கொண்டே கிறிஸ்துவை சேவிக்க முடிவெடுத்தார்.

நீண்ட நாள், கர்த்தரின் பாதத்தில் காத்திருந்து ஜெபித்த பின்,தேவன் அவருக்கு இரண்டு இலக்குகளை முன் வைத்தார்.1.அடிமை வியாபாரத்தை ஒடுக்குதல், 2.மக்களை அறநெறியில் சீர்திருத்தல். ஒருபுறம் வில்பர்போர்ஸ், எடுத்த முடிவிற்கு ஒரு காரணம் ஜான் நியூட்டன் (முன்னாள் அடிமைகள் வியாபாரி மற்றும் பெரிய சுவிசேஷகர்) ஆக இருந்தாலும், அவர் நேரடியாக அடிமைத்தன எதிர்ப்பாளராக மாறுவதற்கு காரணம், கிறிஸ்துவின் மேல் கொண்டிருந்த அன்பே என்பதுதான் உண்மை.

அடிமை வியாபாரத்தை ஒழிக்க அவர் பட்ட பாடுகள் அநேகம்.கண்டனக் கனைகளுக்கும், படுகொலை மிரட்டல்களுக்கும் ஆளானார்.இவரது கொள்கையினால் கடுங்கோபங்கொண்ட கடல் கேப்டன் ஒருவர், வில்பர்போர்ஸை தெருவில் அடித்து நொறுக்கினார்.இத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியில் 1793ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அடிமைத்தன ஒழிப்புக்கு ஆதரவாக மசோதா(Bill)ஒன்றை தாக்கல் செய்தார்.மறுமுறை ஆங்கிலேய கப்பல்கள் அடிமைகளை வெளிநாட்டு எல்லைகளுக்கு ஏற்றிச் செல்வதை எதிர்த்தும் மசோதா தாக்கல் செய்தார்.இது தவிர 70 கிறிஸ்தவ சமூகங்களுடன் தொடர்பில் இருந்து, தன் ஊழியத்தையும் நிறைவேற்றினார்.

சுமார் இருபது ஆண்டு போராட்டத்திற்குப்பின் காற்று இவர் பக்கமாக வீசத்தொடங்கியது. பொதுமக்களும். அரசியல் தலைவர்களும், அடிமைத்தனத்தின் தீமைகளை உணர வைத்தார். வில்பர்போர்ஸ் 1807ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் (House Of Commons)அடிமைத்தன ஒழிப்புக்கு அநேகர் ஆதரவு கொடுக்க அடிமைத்தன ஒழிப்பு மசோதா நிறைவேறியது.1833ஆம் ஆண்ட வில்பர்போர்ஸ் மரிப்பதற்கு 3 நாட்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் அரசு அனைத்து அடிமைகளையும் விடுதலை செய்து சட்டம் பிறப்பித்தது.

வில்பர்போர்ஸ், இயேசு கிறிஸ்து மீது வைத்த அநாதி அன்பினால், விசுவாசத்தினால், ஒரு வசதியான கவனக்குறைவான இளம் அரசியல்வாதியிலிருந்து கருணை உள்ளம் கொண்ட பொதுமக்கள் சேவை செய்யும் ஊழியனாய் மாறி வாழ்ந்து காட்டினார். அவரை வெஸ்ட் மினிஸ்டர் அபேயில் (West Minister Abbey) வில்பர்போர்ஸை அடக்கம் செய்து,அவருக்கு ஒரு சிலையும் நிறுவியது.

‘‘தாழ்மைக்கும்,கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்.’’நீதி.22:4

எவ்ளோ கரிசனை



Youtube என்பது இண்டர்நெட் மூலமாக video க்கள் பார்க்க பயன்படும் ஒரு மென்பொருள் என்பது நாம் அறிந்ததே. பெற்றோர்களோடு சேர்ந்து பிள்ளைகளும் கம்ப்யூட்டர் மற்றும் மொபைல் போனில் வீடியோ பார்க்கும் பழக்கம் உலகம் முழுக்க வளர்ந்து வரும் நிலையில் குழந்தைகள் மட்டுமே வீடியோ பார்க்க youtube kids என்ற புதிய சாப்ட்வேர் ஒன்றை புதிதாய் அறிமுகம் செய்திருக்கிறார்கள். youtube kids-ல் தேவையல்லாத விளம்பரங்கள் கிடையாது, குழந்தைகள் விரும்பிப் பார்க்கும் வீடியோக்கள் மட்டுமே உண்டு, பெற்றோர்களால் குழந்தைகளின் பொழுது போக்கை கட்டுப்படுத்தும் வசதி என்று பல்வேறு அம்சங்கள் உள்ளது.Google-க்கு தான் குழந்தைகள் மேல் எவ்வளவு கரிசனை!

குழந்தைகளின் தேவைகளை அறிந்து, அவற்றை பூர்த்தி செய்து அவர்களைத் தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருப்பதில் வணிக நிறுவனங்கள் கண்ணும் கருத்துமாயிருக்கின்றன. வெறுமனே வியாபாரம் செய்யும் வணிக நிறுவனங்கள் லாப நோக்கத்திற்காக இவ்வளவு அக்கறையோடியிருக்கும்போது கடவுளைத் தொழுதுகொள்ளும் நாம், கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றும் நாம் நம் குழந்தைகள் மேல் எவ்வளவு அக்கறையாயிருக்க வேண்டும்?

குழந்தைகளை நேசிக்காத, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத தேசமோ, திருச்சபையோ, தழைத்ததாக சரித்திரமில்லை. உங்கள் திருச்சபையில் மாதத்திற்கு ரூ 30,000 காணிக்கை வருகிறதென்றால் எவ்வளவு பணம் நேரடியாக ஊழியத்திற்கு செல்லும் என்று நினைக்கிறீர்கள்? குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஊழியத்திற்கு நீங்கள் குடும்பமாய், திருச்சபையாய் என்ன செய்கிறீர்கள்? ஒரு பக்கம் மிகுந்த கரிசனையோடும், லாபநோக்கோடும் குழந்தைகளை கையாளும் வணிக உலகம் மற்றொரு பக்கம் குழந்தைகளைக் கண்டுகொள்ளாமல் பறந்துபோகும் திருச்சபை. என்ன செய்வது? “உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” என்று சிலுவை சுமந்தபோது இயேசு சொன்னது எப்போதும் நம் இதயத்திலிருக்கட்டும்.

-APJ

குட்டிக் கதை

நான்கு இட்லி

ஒரு பெரிய மென்பொருள் நிறுவனத்தின் இயக்குனர் நான்காயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்டார். நீதிபதிக்கு அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. “காலையில் உங்களுக்கு உணவு ஏதாவது கொடுத்தார்களா?” “இல்லை’ என்று தலையாட்டினார் இயக்குனர். நீதிமன்ற ஊழியரிடம் நான்கு இட்லி வாங்கி வருமாறு ஆணையிட்டார். இயக்குனரின் கையில் இட்லிப் பொட்டலம் கொடுக்கப்பட்டது. “பரவாயில்லை. இங்கேயே சாப்பிடுங்கள். அதற்குள் நான் இன்னொரு வழக்கு விசாரணையை முடித்துவிடுகிறேன்.” இயக்குனரால் மூன்று இட்லிக்கு மேல் சாப்பிட முடியவில்லை. பேந்தப் பேந்த விழித்தபடி நின்று கொண்டிருந்தார். “என்ன ஒரு இட்லியை வைத்து விட்டீர்கள்? சாப்பிட்டுவிடுங்கள்.” “முடியவில்லை ஐயா... என்னால் சாப்பிட முடியவில்லை.” “பார்த்தீர்களா? உங்களால் சாப்பிட முடிந்தது மூன்று இட்லிதான். அதற்கு மேல் உங்கள் வயிற்றில் இடமில்லை. இதற்குகாகவா நீங்கள் நான்காயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்தீர்கள்? மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் மிகவும் குறைவானவை. அகந்தையின் தேவைகள்தான் அதிகம். உங்கள் வயிற்றுக்குத் தீனி போடுவது எளிது. அதற்கு நான்கு இட்லியே அதிகம். உங்கள் அகந்தைக்கு... நான்காயிரம் கோடி என்ன... நாற்பதாயிரம் கோடி கூடப் போதாது..” இயக்குனர் பெரிதாக அழ ஆரம்பித்தார். அவர் மீதம் வைத்த அந்த நான்காவது இட்லி அவருக்கு மட்டும் இல்லை. நமக்கும் பல மகத்தான பாடங்களைச் சொல்லிக்கொடுக்கிறது. மூர்க்கத்தனமாகப் பொருட்களைச் சேகரிக்கும் முட்டாள் தனத்தை விட்டு விடுவோம். கொண்டு போக முடியாத பொருளைச் சேர்ப்பதைவிட இருப்பதைப் பகிர்ந்து கொள்வோம்.

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? மத்.16:26

தடுமாறாதே... தடம் மாறாதே...!

M.Merlin TDCM


எவ்ளோ டேஸ்டா இருக்கு நீதான் வர மாட்டேன்னு சொல்லிட்ட. அங்க வாழைப்பழம்லாம் நிறையா இருந்தது.
அப்படியா! என்னையும் கூட்டிட்டு போயேன்.
பாத்து உக்காரு முயலே. கீழ விழுந்துராத. ஆமா இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?
இந்தா வந்துட்டு, அங்கப் பாரு.
ரொம்ம்ம்ப... பசி எடுக்கு, வேட்டைய ஆரம்பிச்சிரலாம். வாழைத்தோட்டம் ரெடியா இருக்கு.
போச்சே... போச்சே... எல்லாம் போச்சே... என் வயல் எல்லாம் போச்சே.
எல்லாம் யானயோட அட்டகாசம் தான் கால் தடம் இருக்குது பாரு இதுக்கு ஒரு முடிவு கட்டனும்
-தொடரும்

நடப்பு செய்திகள்

NEWS

மண் குவளைகளுக்கு உயிர்கொடுக்கும் இந்திய ரயில்வே துறை:

இந்திய ரயில்வே துறையில் மீண்டும் மண் குவளைகள் கொண்டுவரப்படுவதாக இந்து தமிழ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. மத்திய ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் சமீபத்தில் வாரணாசி மற்றும் ரேபரேலி ரயில் நிலைய அதிகாரிகளுக்குப் பிறப்பித்த உத்தரவில் பயணிகளுக்கு வழங்கும் உணவுப்பொருட்கள் பால், தேநீர், காபி உள்ளிட்டவற்றை மண்குவளையிலும் பீங்கான் தட்டுகளிலும் வழங்க கோரியுள்ளார். ரயில்வே மற்றும் வடகிழக்கு ரயில்வே மேலாளர்களும் மண்குவளை பயன்படுத்த உத்தரவிட்டுள்ளனர்.ரயில் நிலையங்களில் மண்குவளையில் தேநீர், பால், காபி ஆகியவற்றை அருந்துவது பயணிகளுக்கு புதுமையான அனுபவத்தை தருவதாகவும் இதை தயாரிக்கும் மக்களுக்கு மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பையும் வழங்கும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

10ஆம், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு அறிவிப்புகள்

தமிழ்நாடு அரசுப்பள்ளிகளில் படிக்கும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான அரசுப் பொதுத்தேர்வு வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ளது. இந்த ஆண்டு சுமார் 9 லட்சம் மாணவர்கள் எழுத உள்ளனர்.இதனை முன்னிட்டு பள்ளிகளில் பாடத்திட்டங்களை விரைவில் நடத்தி முடிக்கும் பணியில் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.அதைப்போலவே, 10ம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில பாடத்தின் முதல் மற்றும் இரண்டாம் தாள் பொதுத்தேர்வுகள்,மதியம் 2 மணிக்கு தொடங்கி மாலை 4.45 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களும் மாவட்டத்தில் உள்ள அரசுப்பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அளித்துள்ளனர்.மாணவர்களின் செய்முறை நோட்டுகள் செய்முறைத்தேர்வு கண்காளிப்பாளருக்கு முன்கூட்டியே சமர்ப்பிக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சியில் விண்வெளி ஆய்வு பயிற்சி மையம்-இஸ்ரோ தலைவர் தகவல்:-

விண்வெளி துறையில் இளம் விஞ்ஞானிகளையும்,ஆய்வுகளையும் ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.இதில் இளம் விஞ்ஞானிகள் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் 3 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு,அவர்களுக்கு செயற்கைக்கோள்களை உருவாக்குவது தொடர்பாக ஒரு மாதம் செய்முறை பயிற்சி அளிக்கப்படும்.இதற்காக பெரும்பாலும் 8ம் வகுப்பு நிலையில் உள்ள மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.இதற்கான செலவை இஸ்ரோ ஏற்றுக்கொள்ளும்.இந்த திட்டத்துக்கு மாநில அரசுகளும்,கல்வி நிறுவனங்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.விண்வெளி துறையில் தொடக்க நிலையில் வளர்ந்து வருபவர்களை ஊக்குவிப்பதற்காக ஆய்வு மையங்கள் திருச்சி, நாக்பூர், ரூர்க்கெலா, இந்தூர் நகரங்களில் ஏற்படுத்தப்படும். ஏற்கனவே திரிபுரா மாநிலத்தில் இதுபோன்ற ஆய்வு மையம் உருவாக்கப்பட்டு உள்ளது.அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவுக்கு மேலும் 54 செயற்கைக்கோள்கள் தேவைப்படுகின்றன. அவற்றை விண்ணில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்"என்று அவர் கூறியதாக அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதாந்திர ஜெபக்கூடுகை

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை
காலை 10 மணி முதல் 12 மணி வரை
சிறுவர் ஊழியத்திற்காக சிறப்பு
ஜெபம் நடைபெறும்

நாள் : 9-2-2019

நேரம் : காலை 10-12 மணி

இடம் : **TDCM Cenacle,** பேராயர் இல்ல வளாகம்

அனைவரும் வருக.

காணிக்கை மற்றும் தொடர்புக்கு

மணியார்டர் (MO) அனுப்ப வேண்டிய முகவரி

அருள்திரு.A.பாக்யராஜ்,
பாலியர் நேசன்,
16,B வடக்கு மேட்டுதிடல் சாலை,
பேராயர் இல்ல வளாகம்,
பாளையங்கோட்டை - 627002

For Online Transfer:
CHEQUE / DD: CSITA Tirunelveli Diocese

Bank: Bank of India SB A/c No: 827020110000283
IFSCode: BKID0008270

குறிப்பு: Online & M.O. மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் உங்கள் மொபைல் எண் அல்லது இ-மெயில் தெரிவித்தால் ரசீது அனுப்ப உதவியாயிருக்கும்

உள்நாடு : ஆண்டு சந்தா : ரூ.100/- ஆயுள் சந்தா : ரூ.1500/-
வெளிநாடு : ஆண்டு சந்தா : $50 ஆயுள் சந்தா : $500

ஆசிரியர்: அருட்திரு.A.பாக்யராஜ்
இணை ஆசிரியர்: திருமதி. ஜீனிதா டேவிட்சன்
இதழ் வடிவமைப்பு:K.பிளஸ்சன்

www.baliarnesan.com,
baliarnesan@gmail.com,
TDCM Helpline:8489857572.

R.N.I.No: 1278/1957 Regn. No: TVL/030/2015-2017. Date of Publication: 20.12.2018
Posted at: Head Post Office, Palayamkottai on the 22nd of every month.

குழந்தைகளுக்கானஉரிமைகள்

1.வாழ உரிமை.
2.நோயில்லாமல் வாழ்வதற்கான உரிமை.
3.சத்தானஉணவை உண்ணஉரிமை..
4.தூய்மையானகுடிநீரைப்பெறும் உரிமை.
5.பெற்றோரை சேர்ந்துவாழவும்,அவர்களால்
பாதுகாக்கப்படுவதற்குமானஉரிமை.
6.ஒருவர் தாம் விரும்பும் பெயரை வைத்துக்கொள்ளும்
உரிமை.
7.கட்டாய,இலவச தரமானகல்விபெறும் உரிமை.
8.ஒரு நாட்டை தனது தாய் நாடாக்கிக் கொள்ளும் உரிமை.
9.கட்டாய குழந்தை பருவத்தில் போதிய பராமரிப்பு பெறும் உரிமை.
10.சமூகத்தில் பாதுகாப்பிற்கானஉரிமை.
11.ஓய்வுபெறுவதற்கான உரிமை.
12.விளையாடுவதற்கான உரிமை.
13.பொழுதுபோக்குவசதிகள் பெறும் உரிமை.
14.கலை,கலாச்சாரத்தில் பங்குபெறும் உரிமை.
15.பொருளாதார சுரண்டலுக்கு உட்படாமல் இருக்கும் உரிமை.
16.கேவலப்படுத்தப்படாமலிருக்க உரிமை.
17.மனிதாபிமானமற்றமுறையில் நடத்தப்படாமலிருக்க உரிமை.
18.தரக்குறைவாக நடத்தப்படாமலிருக்க உரிமை.
19.புறக்கணிக்கப்படாமலிருக்க உரிமை.
20.குழந்தைகள் மீது நடத்தப்படும்
வன்முறையிலிருந்து விடுதலைபெறும் உரிமை.
21.போர்காலங்களில் பாதுகாக்கப்பெறும் உரிமை.
22.குழந்தை தமக்கென்று ஒரு கருத்தைக் கொள்ளும் உரிமை.
23.கருத்தை வெளிப்படுத்தும் உரிமை.
24.தகவல் பெறும் உரிமை.
25.சிந்திப்பதற்கான உரிமை.
26.மனசாட்சிப்படி நடக்க உரிமை.
27.விரும்பிய மதத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை.
28.அன்புசெய்யவும் பழகவும் உரிமை.

CHILD LINE 1098

published by: Rev. A. Packiaraj,Tirunelveli Diocesan Children's Mission.
Printed at: Tirunelveli Diocesan Offset Press, Palayamkottai.